**திம்புலாகல பிரதேச சபை - 2022**

-----------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

திம்புலாகல பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் திம்புலாகல பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள்

மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல
.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய

ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் கீழே குறிப்பிடப்படுகின்ற தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவையின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவையின் பிரகாரம், முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பாக கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்குரிய ரூபா 3,449,162 ஆன செலவினம் நிதிக்கூற்றுக்களிலிருந்து கைவிடப்பட்டிருந்தது. | சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக. | சரியாக கணக்குகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்குரிய ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியங்களிற்காக செலுத்த வேண்டிய ரூபா 77,227 யினை நிதிக்கூற்றுக்களிலிருந்து கைவிடப்பட்டிருந்தது. | 2023 நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக. | -மேற்படி- |
| (இ) | மீளாய்வாண்டில் நவம்பர் - திசெம்பர் மாதங்களிற்குரிய ரூபா 689,000 ஆன மணல் அகழுவு வருமானம் நிதிக்கூற்றுக்களிலிருந்து கைவிடப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஈ) | மீளாய்வாண்டிற்குரியதாக கிடைக்க வேண்டிய வாகனங்கள் மற்றும் | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | இயந்திர வாடகை வருமானம் ரூபா 351,240 நிதிக்கூற்றுக்களிலிருந்து கைவிடப்பட்டிருந்தது. | | |
| (உ) | மீளாய்வாண்டிற்குரிய கிடைக்க வேண்டிய விளம்பர பலகை வருமானம் ரூபா 93,950 நிதிக்கூற்றுக்களிலிருந்து கைவிடப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஊ) | பிரதேச சபைக்கு சொந்தமான ரூபா 177,183,995 பெறுமதியான 06 காணிகள் மற்றும் கட்டிடங்களளின் பெறுமதி நிதிக்கூற்றுக்களிலிருந்து கைவிடப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (எ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிற்கு நிலவிய ரூபா 49,575,442 ஆன கைத்தொழில் கடன்பட்டோர் மீதி மற்றும் ரூபா 54,042,467 ஆன கைத்தொழில் கடன்கொடுத்தோர் மீதி நிதிக்கூற்றுக்களிலிருந்து கைவிடப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஏ) | சேதம் மற்றும் நட்ட பதிவேடு பிரகாரம் மீளாய்வாண்டு இறுதியில் காணப்பட்ட ரூபா 2,752,972 ஆன சேதம் மற்றும் நட்ட நிதிக்கூற்றுக்களிலிருந்து கைவிடப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஐ) | மீளாய்வாண்டிற்குரிய கணக்காய்வு கட்டணத்திற்காக ஏற்பாடு வழங்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஒ) | பிரதேச சபை அலுவலகத்தில் பொருத்தியுள்ள சோலா பெனல் தொகுதியின் ரூபா 3,100,000 ஆன கிரயத்தை நிதிக்கூற்றுக்களிலிருந்து கைவிடப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஓ) | மீளாய்வாண்டு இறுதியில் களஞ்சியத்தில் காணப்பட்ட ரூபா 544,482 பெறுமதியான 12 சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களிலிருந்து கைவிடப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |

### 1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியிற்கு 04 கணக்கு மீதிகளில் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த மீதிகள் மற்றும் அவைகளிற்குரிய பதிவேடுகள/அட்டவணைகளில் காண்பிக்கப்பட்டிருந்த கூட்டத்தொகைகளிற்கிடையில் ரூபா 24,200,426 வித்தியாசம் ஆனது. | சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக. | துணை பதிவேடுகளை இணங்கஞ் செய்து சரி செய்ய வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான ஆவண சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியிற்கு ரூபா 61,026,530 பெறுமதியான 05 கணக்கு மீதிகளை நாளாதுவரையாக்கிய துணை ஏடுகள், அட்டவணைகள், மீதி உறுதிப்படுத்தல்கள் மற்றும் பெறுமானத்தேய்வு பகுப்பாய்வு கணக்காய்விற்கு சமர்ப்பிக்காத காரணத்தால் திருப்திகரமாக பரிசோதிக்க முடியவில்லை. | பதிவேடுகளை நாளாதுவரையாக்க நடவடிக்கை எடுப்பதாக. | தேவையான விபரங்கள் மற்றும் நாளாதுவரையாக்கப்பட்ட பதிவேடுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணக்காமை சந்தர்ப்பங்கள் பின்வருமாறு காட்டப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| உள்ளூராட்ச்சி ஆணையாளர் சுற்றறிக்கை | | | |
| 1994 ஜுலை 18 திகதிய என்சீசீ/எல்ஜீ/9/7/19 கொண்ட சுற்றறிக்கையின் 1 மற்றும் 2 பந்தி | பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீடு அல்லது உள்ளூராட்சி சேவைக்கு சொந்தமான மதிப்பீட்டாளர் ஒருவர் நிறுவனத்தில் இருப்பின் அவரின் மதிப்பீட்டை ஏனும் கவனத்திற் கொண்டு சந்தையில் | முறையான மதிப்பீடொன்றை மேற்கொள்ள தேவையான நடவடிக்கை எடுப்பதாக. | மதிப்பீட்டு அறிக்கையை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

கடையறைகளிற்கு மாதாந்த வரி தொகையை தீர்மானிக்க வேண்டியதுடன், அம் மதிப்பீட்டு வரி வாடகையை ஐந்து ஆண்டுகளிற்கு ஒரு முறையாவது திருத்த வேண்டிய போதும், பிரதேச சபையின் கடையறைகளிற்காக மாதாந்த வரித் தொகை 2017,2020 ஆண்டுகளின் போது தற்காலிக மதிப்பீட்டின் மீது தீர்மானித்து அதன் மீதான அடிப்படையில் அறவிடப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 11,965,451 ஆக இருந்ததுடன் அதற்கு ரேுரொத்ததாக முன்னைய ஆண்டில் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 81,844,803 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 41,250,000 | 33,059,875 | 30,860,679 | 15,497,025 | 29,500,000 | 40,678,199 | 29,454,249 | 13,297,828 |
| (ii) | வாடகை | 6,513,827 | 3,162,964 | 2,671,906 | 5,070,828 | 6,530,850 | 6,386,313 | 6,440,296 | 4,579,767 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 16,539,750 | 2,569,865 | 2,052,100 | 2,829,500 | 12,672,060 | 2,125,186 | 1,844,880 | 2,311,735 |
| (iv) | ஏனைய வருமானம் | 13,300,000 | 35,334,616 | 1,592,625 | 61,002,773 | 24,611,570 | 43,294,308 | 48,615,783 | 40,558,615 |
| | | 77,603,577 | 74,127,320 | 37,177,310 | 84,400,126 | 73,314,480 | 92,484,006 | 86,355,208 | 60,747,945 |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வாடகை** | | |
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று நிலுவை வாடகை வருமானம் ரூபா | சட்டரீதியான செயற்பாடுகளை | நிலுவை வருமானங்களை |

| | | |
|---|---|---|
| 1,933,840 மற்றும் நிலுவை வாராந்த சந்தை வரி வருமானம் ரூபா 2,696,722 அனது. | மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக. | அறவிட போதிய கவனம் செலத்த வேண்டும். |

**(ஆ) அனுமதிபபத்திர கட்டணம்**

| | | |
|---|---|---|
| கடந்த ஆண்டு இறுதியில் காணப்பட்ட வியாபார அனுமதிப்பத்திர, கைத்தொழில் வரி மற்றும் வியாபார வரி நிலுவை ரூபா 2,311,735 இனை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை வருமானம் அறவிட விரைவில் நடவடிக்கை எடுப்பதாக. | - மேற்படி - |

**(இ) ஏனைய வருமானம்**

| | | | |
|---|---|---|---|
| (i) | சமர்ப்பிக்கப்ட்ட அறிக்கை பிரகாரம் 04 நீர் கருத்திட்டங்களிற்குரிய 2022 ஆண்டின் பில்யிடப்பட்ட வருமானம் ரூபா 33,059,875 ஆனதுடன், 2022 திசெம்பர் 31 திகதிற்கு நிலுவை நீர் கட்டணம் ரூபா 15.497,025 ஆனது. இதன் பிரகாரம் ஆண்டின் வருமானத்தில் 47 சதவீத விகிதமொன்று நிலுவை வருமானமாக நிலவியது. | நிலுவை நீர் கட்டண வருமானத்தை கணிசமாக குறைக்க நடவடிக்கை எடுப்பதாக. | வருமான இலக்குகளை அடைந்து கொள்ள நவ்டிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | மாகாண சபை பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று பெற வேண்டி இருந்த நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 59,854,023 தொகை மற்றும் முத்திரை கட்டணம் ரூபா 1,148,750 ஆனது. | நிலுவை நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டண பெறுமதியை அறவிட நடவடிக்கை எடுத்ததாக. | - மேற்படி - |

## 3. செயற்றட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தால் விதிக்கப்பட்டுள்ள பணிகளை மேற்கொள்ளல்

பிரதேசசபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனை சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| **(அ) உப விதி** | | |
| பிரதேச சபைச் சட்டத்தின் 126 பிரிவின் கீழ் துணை சட்டங்களை விதிக்க வேண்டியருந்த வாராந்த சந்தை வரி, முச்சக்கர வண்டிக் கட்டணம் மற்றும் விற்பனை மேம்பாட்டு நிகழ்சித் திட்டங்கள் போன்ற 03 விடயங்களிற்காக துணை சட்டம் விதிக்கப்பட்டிருக்கவில்லை. | அனைத்து துணை சட்டங்களையும் 2023 ஆண்டினுள் விதிக்க நடவடிக்கை எடுப்பதாக. | தேவையான துணை சட்டங்களை விதிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**(ஆ) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

| | | |
|---|---|---|
| பிரதேச சபையினால் வருடாந்தம் ஒன்றுதிரட்டும் உக்கலடையாத கழிவுகளை வெளியிட திட்டவட்டமான முறைமை ஒன்று இல்லாததுடன், அவ்வாறு ஒன்றுதிரலும் 434 டொன் அளவை தம்பகஹஉல்பத்த கழவு தொட்டிலில் இடப்பட்டிருந்து. | தம்பகஹஉல்பத்த கழவு தொட்டிலின் நிர்மாணப் பணிகள் தற்போது விரைவாக செய்யப்படுவதுடன், 2023 ஆண்டில் உக்கலடையாத கழிவுகளை மீள்சுழற்சி செய்வதற்காக நடவடிக்கை எடுப்பதாக. | சூழல் நேய திண்மக் கழிவு முகாமைத்துவ வேலைத் திட்டமொன்றின் மீது கவனம் செலுத்த வேண்டும். |

**(இ) ஏற்பாடு வழங்கப்படாமை**

| | | |
|---|---|---|
| திப்புலாகல பிரதேச சபையினால் செயற்படுத்தும் நீர் சுத்திகரிப்பு நிலையத்தை பராமரிக்க மீளாய்வாண்டினுள் பாதீடொன்றை அங்கீகரித்து ஏற்பாட்டை வழங்கி இருக்காததுடன், ஆண்டினுள் சேர்க்கப்பட்ட ரூபா 32,429,861 ஆன வருமானத்திலிருந்து நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக ரூபா 654,640 அதாவது வருமானத்தின் 2 சதவீதத்திற்கும் குறைந்த விகிதமொன்று செலவிடப்பட்டிருந்தது. இதன் காரணமாக நீரின் தரம், உபகரணங்கின் பாதுகாப்பு மற்றும் உரிய வருமான அறவிடலின் மீது பாதகமான தாக்கம் செலுத்தியிருந்தது. | 2022 இன் பாதீடு அங்கீகரிக்கப்படாததன் மீது முலதன செலவுகளை மேற்கொள்வது மட்டுப்படுத்தப்பட்டு இருந்ததனால் கனிசமான பெறுமதியொன்றை செலவு செய்ய முடியாது உள்ளதாகவும், 2023 ஆண்டில் செயற்பட்டு வருவதாக. | நீர் கருத்திட்டத்தை நடாத்துவதற்காக போதியளவு ஏற்பாடுகள் பெற்றுக் கொள்ள வேண்டும். |

**3.2 முகாமைத்துவ பலவீனங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமான 04 நீர் கருத்திட்டங்கள் ஊடாக 6557 நீர் இணைப்புக்கள் வழங்கப்பட்டிருந்த போதும், அதற்குரிய 1167 நீர் மாணிகள் அதாவது 17.8 சதவீதம் செயலற்ற நிலையில் நிலவிய நீர் மாணிகளினுடன் கூடிதாகும். | தேவையான நடவடிக்கைகளை தற்போது மேற்கொண்டு வருவதாக. | முன்னேற்றத்தை அறிக்கையிட வேண்டும. |
| (ஆ) | சபை நிதியத்தினால் ரூபா 754,930 செலவிட்டு 2015 ஆண்டில் உறுப்பினர்களுக்கு வழங்கியருந்த 05 மடிக் கணனி இயந்திரங்கள் மற்றும் 02 iPad இயந்திரங்களை பெற்றுக் கொண்டு 06 வருடங்களிற்கு அதிக | குறித்த பெறுமதியை சபைக்கு தீர்க்குமாறு எழுத்து மூலமாக அறிவூட்டியதாக. | சட்டரீதியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காலம் கடந்திருந்த போதும் மீண்டும் சபைக்கு பெற்றுக் கொண்டிருகாததுடன், 05 மடிக் கணனி இயந்திரங்கள் மற்றும் iPad இயந்திரமொன்றை திருப்பி ஒப்படைக்க முடியாத 06 உறுப்பினர்களால் அதற்குரிய பெறுமதியை 2019 ஜுன் 26 திகதி முதல் 30 தவணைகளில் செலுத்துவதற்கு உடன்பட்டிருநத் போதும் அக் கொடுப்பனவுகளையும் புறக்கணித்திருந்தனர். | | |
| (இ) | 2014 திசெம்பர் 16 திகதி சபைக்கு வழங்கியிருந்த 360 கெல்வனயிஸ் கொடிகம்பங்கள் முன்னைய தலைவர் மற்றும் 05 உறுப்பினர்களிற்கு விநியோகித்து 08 வருடங்களிற்கு அதிக காலம் கடந்திருந்த போதும் அவற்றை சபைக்கு பெற்றுக் கொண்டிருக்கவில்லை. | குறித்த உறுப்பினர்களை அறிவூட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டதாக. | அறவிட சட்டரீதியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 2016 ஜுன் முதல் 2017 ஜுன் 28 வரை காலத்தினுள் நீர் கடட்ணம் அறவிடுகையில் பெறுவனவு பற்றுச்சீட்டுகளில் மூல பிரதியில் குறிப்பிட்டுள்ள தொகையை விட குறைந்த தொகையொனறை பிரதியில் குறிப்பிட்டு ரூபா 2,625,660 தொகையை அகற்றிக் கொண்டது தொடர்பாக ஒழுக்காற்று வழிகாட்டியின் 23.7 பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளும் போது அகற்றிக் கொண்ட தொகை ரூபா 1,711,782 எனக் குறிப்பிட்டு ஒழுக்காற்று கட்டளை விதிக்கப்பட்டிருந்தது. | வித்தியாசமான பெறமானங்களிற்காக புலனாய்வொன்று மேற்கொண்டுத்தருமாறு உள்ளூராட்சி ஆணையாளரிடம் எழுத்து மூலமா கோரியுள்ளதாக. | சரியான பெறுமதிகளை இனங்கண்டு ஒழுக்காற்றுகட்டளை விதிப்பதற்காக தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (உ) | 2011 ஆண்டில் திம்புலாகல பிரதேச சபையின் வருமான பரிசோதகரினால் செய்யப்பட்ட நிதிரீதியான நட்டம் ரூபா 1,367,681 என இனங்கண்டு 2021 திசெம்பர் 27 திகதி ஒழுக்காற்று கட்டளை விதித்திருந்த போதும் அது தொடர்பான நடவடிக்கைகளை 2023 ஏப்ரல் அளவிலும் எடுத்திருக்கவில்லை. | தேவையான நடவடிக்கை செய்யப்படுமென. | ஒழுக்காற்று கட்டளையை செயற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.3 பெறுகைகள் முகாமைத்துவம்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| சபையின் தேவைகளை இனங்காணாது மற்றும் கொள்வனவு செய்வதற்காக போதிய பதிவு செய்த வழங்குனர்கள் காணப்பட்ட போதும் 09 சந்தர்ப்பங்களில் ரூபா 1,127,472 | சபை செயற்பாட்டு நடவடிக்கைகளை தொடர்ந்து நடாத்திச் செல்ல வேண்டியதால் குறிப்பிடப்பட்ட | பெறுகைகள் வழிகாட்டி பிரகாரம் நடக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமதியான பண்டங்கள் பெறுகைகளிற்கு புறம்பாக கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | பண்டங்களை விரைவில் கொள்வனவு செய்ய தேவையான நடவடிக்கை மேற்கொண்டதாக. | |

**3.4 ஒப்பந்த நிர்வாக குறைபாடுகள்**

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | வாகன கழுவும் நிலையத்தின் எஞ்சிய வேலைகளை பூர்த்தி செய்ய ரூபா 2,034,430 ஆன மதிப்பீட்டு பெறுமதியின் கீழ் 2021 ஒக்டோபர் 25 திகதி சங்கமொன்றுடன் உடன்படிக்கை செய்து அதற்காக ரூபா 406,886 முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது. இதற்குரிய உடன்படிக்கை காலம் 2022 ஏப்ரல் 25 திகதி முடிவடைந்துள்ள போதும், குறித்த பணிகள் மீளாய்வாண்டு இறுதி வரையும் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | குறித்த கருத்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகள் உடன்படிக்கை பிரகாரம் விரைவில் முடிவுறுத்த தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஒப்பந்ததாரரை அறிவுறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதென. | எதிர்பார்த்த நோக்கத்தை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2021 பிரதேச சபை நிதியத்தின் கீழ் பிரதேச சபை உறுப்பினர்களின் உத்தேசத்தின் மீது பொது சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கிராமிய பாதைகளை பரல் இட்டு அபிவிருத்தி செய்யும் 07 கருத்திட்டங்களுக்காக ரூபா 1,170,668 ஆன முற்பணம் செலுத்தி ஓராண்டிற்கு அதிக காலம் கடந்துள்ள போதும் கருத்துக்களின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு இருக்காததுடன் அதற்காக செலுத்திய முற்பணம் ரூபா 1,170,668 தொகையை தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை | முப்பணத் தொகையை அறவிட சட்ட நடவடிக்கை எடுப்பதாக. | அறவீட்டு விபரங்களை அறிக்கையிட வேண்டும் |

**3.5 மனிதவள முகாமைத்துவம்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| **ஊழியர் வெற்றிடமும் மிகையும்** | | |
| 2022 திசெம்பர் 31 திகதியன்று அங்கீகாரம் மற்றும் உள்ளவரான ஆளணி விபரங்களின் பிரகாரம் ஆளணியில் 12 வெற்றிடங்கள் நிலவின. | ஊழியர் வெற்றிடங்கள் தொடர்பாக குறித்த நிறுவனங்கள் அறிவுறுத்தியுள்ளதாக. | வெற்றிடங்களை நிரப்பிக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் |

## 4. கணக்களி பொறுப்பு மற்றும் நல்லாளுகை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **பாதீட்டுக் கட்டுப்பாடு** | | |
| 1987 இன் இலக்கம் 15 கொண்ட பிரதேச சபை சட்டத்தின் 168(2) பிரிவு பிரகாரம் மீளாய்வாண்டிற்காக திம்புலாகல பிரதேச சபையினால் பாதீடொன்றை அங்கீகரித்துக் கொண்டிருக்கவில்லை. | நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட தடை உத்தரவுடன் வரவு செலவு திட்டத்தை அங்கீகரித்துக் கொள்ள முடியுமாக இருக்கவில்லையென. | பிரதேச சபை சட்டத்தின் பிரகாரம் சபை ஒன்றை தாபிப்பதன் நோக்கத்தை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |